பக்கங்கள் : 12

viber : 076 636 3378

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23

ஒலி 341 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 09 வெள்ளிக்கிழமை (25.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## அதிகாரப் பகிர்வுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை

### பாராளுமன்றில் சரத் வீரசேகர



(கொழும்பு)

நாட்டில் அதிகார பகிர்வுக்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க சிங்கள இனம் வரலாற்றில் இருந்து செய்து வந்த உயிர்த் தியாகத்தை ஒவ்வொரு இனத்தின் தேவைக்காகவும், ஒரு சிலரின் தேவைக்காகவும் விட்டுக் கொடுத்து நாட்டை பிளவுபடுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார். 11

கிளிநொச்சியைச் சேர்ந்த

## 5 பேர் ஏதிலிகளாக தமிழகத்தில் தஞ்சம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர், நேற்று அதிகாலை தமிழகத்தின் தனுஷ்கோடி கடற்பகுதியை சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், மண்டபத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை பொருளாதார ஏதிலிகளின் மொத்த எண்ணிக்கை 11

முல்லை ஒட்டுசுட்டானில்

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் 20ஆவது கிலோமீற்றர் வனப் பகுதியில் காட்டு யானை தாக்கி சின்னசாளம்பனைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். 11

இனப் பிரச்சினையைத் தீர்க்க

# அதிகாரப் பகிர்வுக்கு தயாராகவுள்ளோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பாராளுமன்றில் தெரிவிப்பு



(கொழும்பு)

இனப் பிரச்சினையைத் தீர்க்க அதிகாரப் பகிர்வுக்கு நாம் தயாராகவுள்ளோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் விபத்து; 10 பேர் காயம்



11

மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு

## மன்னார் நீதிமன்றம் இடைக்காலத் தடை

(மன்னார்)

அடம்பன் பொலிஸ் பிரிவில் மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்த இடைக்காலத் தடைக் கட்டளையை மன்னார் நீதவான் நீதிமன்றம் நேற்று வழங்கியது.

அடம்பன் பொலிஸார் முன்வைத்த விண்ணப்பத்தை ஆராய்ந்த மன்று குற்றவியல் தண்டனை பிரிவு 106 ஆம் பிரிவின் கீழ் 11

## புலிகள் தொடர்பில் தமிழ் சமூகம் பெருமையடைகின்றது

### பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை ஒழுக்கமான அமைப்பு என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தமையானது பெருமைக்குரிய விடயம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று 11

கோட்டாபயவை ஜனாதிபதியாக்கவே

## ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது - சந்திரிகா

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தேர்ந்தெடுப்பதற்காகவே ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே, முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரி 11

## சபையில் திடீர் வாக்கெடுப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் வரவு செலவுத் திட்டத்திற்கு நேற்றுப் பிற்பகல் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதற்கு ஆதரவாக 91 வாக்குகளும் எதிராக 10 வாக்குகளும் பதிவாகின.

அதன் பிரகாரம் 11

சாவகச்சேரியைச் சேர்ந்தவர்

## வியட்நாமில் மரணம்

### கப்பல் மூலம் கனடா செல்ல முற்பட்டவர்



(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் கனடா செல்ல முற்பட்டு வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாவகச்சேரியை சேர்ந்த நபர் மரணமடைந் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி அரசியலமைப்பே தமிழர்களுக்கு சுதந்திரம்

## பாராளுமன்றில் விக்னேஸ்வரன் எம்.பி



(கொழும்பு)

நியாயமான அதிகார பரவலாக்கத்துடனான சமஷ்டி அரசியலமைப்பே தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்கும் ஒற்றையாட்சி முறைமை அமுலில் இருக்கும் வரை புலம் பெயர் தமிழர்கள் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை, நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வரவு-செலவுத் திட்டத்தில் அவதானம் செலுத்தப்படாமல் இருப்பது பிரதான குறைபாடாகக் கருதப்படுகிறது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றின் மீதான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வரவு-செலவுத் திட்டத்தில் 530 பில்லியன் ரூபாய் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அளவுக்கதிகமான இராணுவத்தினருக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதே தவிர மக்களுக்காக அல்ல.

2009 இற்கு பின்னர் இராணுவத்தினருக்கான செலவு குறையும் என்று எதிர்பார்த்தாலும் ஒவ்வொரு வருடமும் இது அதிகரித்துக்கொண்டே போகின்றது. கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட துறைகளுக்கு குறைந்தளவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை சமூக பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்போது இது தொடர்பில் கேள்வியெழுப்புகின்றனர். மக்களின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாதுகாப்பு செலவீனம் வருடாந்தம் அதிகரிக்கின்றது. இவ்வாறு பாதுகாப்புக்கான செலவீனம் அதிகரிப்பதன் ஊடாக வடக்கு, கிழக்கில் இன்னும் சமாதானம் ஏற்படவில்லை என்பதனையே காட்டுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவம் மக்களின் காணிகள், விவசாய காணிகளைக் கைப்பற்றி வைத்திருக்கின்றது. மக்களுக்கு அதிக வருமானத்தை பெற்றுக்கொடுக்கும் காணிகள் அதிகளவில் இராணுவத்தினர் வசமுள்ளது. மக்கள் வாழ்வாதாரம் இன்றி தவிக்கின்றனர்.

மாகாண சபைகள் மக்களுக்காக நல்ல வேலைத்திட்டங்களை கொண்டு வந்த நிலையில் இராணுவம் காணிகளை கைப்பற்றி செயற்படுகின்றது. மேலும் வடக்கில் இராணுவ முகாம்கள் மற்றும் சோதனை சாவடிகள் இருக்கின்றன. இங்குள்ள காணிகளை மக்களுக்கு வழங்க வேண்டும்.

இதேவேளை ஒற்றையாட்சிக்குள் இருந்துகொண்டு வெளிநாட்டு தமிழர்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாது. வடக்கு, கிழக்கிற்கு நீதி வழங்க வேண்டும்.

எங்களுடைய தேவைகள் எங்களுக்கு முன்னுரிமையானதாக இருக்குமே தவிர மத்திய அரசுக்கு தேவையானதாக இருக்காது.

ஒற்றையாட்சியை முடிவுக்கு கொண்டு வந்து நியாயமான அதிகாரப் பகிர்வை செயற்படுத்த வேண்டும். இதன்படி சமஷ்டி அரசியலமைப்பே தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்கும் என்றார்.

(ம-7)

## இளவாலை பொலிஸ் பிரிவில் கசிப்புடன் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரு பகுதிகளில் இரண்டு இளைஞர்கள் 40 லீற்றர் கசிப்புடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சந்தேகநபரில் ஒருவர் 30 லீற்றர் கசிப்புடனும், மற்றையவர் 10 லீற்றர் கசிப்புடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், மீட்கப்பட்ட கசிப்புடன் இளவாலை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேகநபர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)


### பெயர் மாற்றம்

மாகியப்பிட்டி சண்டிலிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இலக்கம் 526190246V கொண்ட சரசுவதி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை சரஸ்வதி யொஸ்ரீனா என மாற்றிக் கொண்டுள்ளேன். எனவும் இனி மேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

சரஸ்வதி யொஸ்ரீனா (C-5326) 10.11.2022

### கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 23.03.1954 இறப்பு 23.11.2022

எமது கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர்

**Dr. A.G. வீரசிங்கம்**

அவர்கள் 23.11.2022 அன்று காலமானதையிட்டு எமது கல்லூரி சமூகம் கண்ணீர்க் காணிக்கையை சமர்ப்பிக்கின்றது.
அத்துடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(13560)

லங்கா சித்த ஆயுர் வேத கல்லூரி
அதிபர், விரிவுரையாளர்கள், மாணவர்கள், அலுவலர்கள்

### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆரம்பப்பிரிவு ஆசிரியர் திருமதி **கலைவாணி ஜெயக்குமார்** அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் கந்தையா தெய்வேந்திரம்**

அவர்கள் கடந்த 15.11.2022 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்
யா / இணுவில் மத்திய கல்லூரி

(13565)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவலாக்கத்திற்கு நாம் தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

**இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அதிகாரப் பரவலாக்கலுக்கு என்றும் தயாராகவே உள்ளோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்று வரும் வரவு செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "பொதுத் தேர்தலொன்றுக்கு செல்லப் போவதில்லை என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இவர் இந்த பாராளுமன்றுக்கு தேசியப் பட்டியல் ஊடாக வந்தவர். பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவினால் தான் ஜனாதிபதியாகியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷவுக்கு என்ன நடந்தது என்பதை சிந்திக்க வேண்டும்.

மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்காவிட்டால் எவ்வளவு விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று யோசிக்க வேண்டும்.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறிய கருத்தை மாற்றியமைத்து, உடனடியாக பொதுத் தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 220 இலட்சம் மக்களும் இதனைத்தான் எதிர்பார்க்கிறார்கள். இதுதான் ஜனநாயகமாகும்.

அவர் ஜனாதிபதியாக இன்று ஆசனத்தில் அமர்வதற்கு மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் தான் காரணமாகும். எனவே, அவர் இந்த மக்களின் ஆணைக்கு செவி சாய்க்க வேண்டும்.

அமைதியான மக்கள் போராட்டத்திற்கு இந்நாட்டில் இடமுள்ளது. இதற்கு நாம் தலைமை தாங்குவோம்.

நாம் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக அதிகாரப் பரவலாக்கலுக்கு என்றும் தயாராகவே உள்ளோம்.

வரவு- செலவுத்திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின் பின்னர், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், அதிகாரப் பரவலாக்கலுக்கு நாம் தயார்.

ஆனால், ஜனாதிபதி கூறியதைப் போன்று 75 ஆவது சுதந்திரத் தினத்திற்கு முன்னர் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்படியானால், இந்தப் பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கவும் ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# அடிப்படை உரிமைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)

அமைதியான போராட்டம் உட்பட அடிப்படை உரிமைகளுக்கு ரணில் விக்கிரமசிங்க நிர்வாகம் மதிப்பளிக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அமைதியான போராட்டத்தை அதிகாரிகள் ஒடுக்கியுள்ளனர் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆர்ப்பாட்டங்களை நசுக்கியுள்ளதுடன், மாணவர் செயற்பாட்டாளர்களை தடுத்து வைப்பதற்கு இழிவான பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தியுள்ளார் என்றும் அந்தக் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவதாகவும் பாரிய எதிர்ப்புக்கள் ஏற்பட்டால் பாதுகாப்புப் படையினரை நிலைநிறுத்துவதாகவும் எச்சரித்துள்ளதாக அந்தக் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட இலங்கையின் சர்வதேச பங்காளிகள் நெருக்கடியை எதிர்கொள்வதற்கான அத்தியாவசிய நடவடிக்கையாக மனித உரிமைகள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது அவசியம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. (நி)

# கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை நீடிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை நீடித்து நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

அதன்படி அவருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அதன் காரணமாக அவருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்குமாறு கோரி முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோனினால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எதிர்வரும் மாதங்களில் பணவீக்கம் மேலும் குறைவடையலாம்

(கொழும்பு)

எதிர்வரும் மாதங்களில் பணவீக்கம் மேலும் குறைவடையும் என எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதத்திற்கான அதன் நாணயக் கொள்கை மதிப்பாய்வை அறிவிக்கும் மத்திய வங்கி, சாதகமான விநியோகப் பக்க அபிவிருத்திகள் மற்றும் இறுக்கமான பணவியல் கொள்கை நடவடிக்கைகளால் ஆதரிக்கப்பட்டு, செப்டெம்பர் இல் உச்சத்தை எட்டிய பின்னர், ஒக்டோபர் இல் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கப் பாதையை நோக்கிச் சென்றது.

மொத்த தேவை அழுத்தங்கள், உள்நாட்டு வழங்கல் நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள், உலகளாவிய பொருட்களின் விலைகளை இயல்பாக்குதல் மற்றும் உள்நாட்டு விலைகளில் இத்தகைய குறைப்புகளை சரியான நேரத்தில் கடந்து செல்வதால், பணவீக்கத்தின் சரிவு அடுத்த காலகட்டத்திலும் தொடரும் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (நி)

# இலங்கையை கையேந்தும் நாடாக மாற்ற ஒருபோதும் இடமளியேன்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையை கையேந்தும் நாடாக மாற்ற தாம் ஒருபோதும் தயாராக இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் 86 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இலங்கையர்களாக நாம் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஆசிரியப் பணிக்கான ஆட்சேர்ப்பில் மாற்றம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர் பணிக்கான ஆட்சேர்ப்பு முறையில் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதற்கேற்ப தேசிய கல்விப் பல்கலைக்கழகம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "இந்தத் துறைக்கு ஒரு குழுவைக் கொண்டுவர வேண்டும். இந்தத் தேர்வு இறுதியாக நடத்தப்படும்.

அதன் பின்னர், நாங்கள் ஆசிரியர் பணிக்கு ஆட்சேர்ப்பு செய்து, 19 பீடங்களை இணைத்து தேசிய கல்விப் பல்கலைக் கழகத்தை உருவாக்குவோம்.

4 ஆண்டுகள் பட்டப்படிப்பு மற்றும் ஆசிரியர் பயிற்சிக்குப் பின்னர் ஒரு தரமான ஆசிரியர் வகுப்புக்கு அனுப்பப்படுவார். தற்போது அரச சேவையில் உள்ள பயிலுநர் பட்டதாரிகளை ஆசிரியர் பணிக்கு இணைத்துக் கொள்வதற்கான பொதுப் பரீட்சை டிசெம்பர் மாத நடுப்பகுதியில் நடத்தப்படும். 26,000 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பொதுப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும்" எனவும் எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)



துமிந்த சில்வாவின் பொது மன்னிப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இணைத்துக் கொள்ளவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு உர்து பெர்னாண்டோ யசந்த கோதா கொட தலைமையிலான உயர் நீதிமன்ற நீதிபதிகள் தலைமையில் விசாரணைக்கு வந்த போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனை வீழ்த்தி ஜப்பான் திரில் வெற்றி

FIFA 2022 உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முன்னாள் சம்பியனான ஜேர்மனை, ஜப்பான் 2:1 கோல்களால் வென்றது.

கட்டார் தலைநகர் டோஹாவின் கலீபா அரங்கில் இப் போட்டி நடைபெற்றது.

போட்டியின் 33 ஆவது நிமிடத்தில் ஜேர்மனிய வீரர் இல்காய் குண்டகான் முதலாவது கோலை புகுத்தினார்.

இடைவேளையின் போது ஜேர்மனி 1:0 விகிதத்தில் முன்னிலையில் இருந்தது.

எனினும், 76 ஆவது நிமிடத்தில் ஜப்பானிய வீரர் ரிட்ஸிடோவன் கோல் அடித்து, கோல் விகிதத்தை சமப்படுத்தினார்.

அதன்பின் 83 ஆவது நிமிடத்தில் டகுமா அசானோ, ஜப்பானின் இரண்டாவது கோலை புகுத்தி ஜேர்மனிக்கு அதிர்ச்சியளித்தார்.

உலகக் கிண்ண போட்டிகளில் பதிவான மற்றொரு அதிர்ச்சிகரமான பெறுபேறு இது. சர்வதேச கால்பந்தாட்டத் தரவரிசையில் ஜேர்மனி 11 ஆவது இடத்திலும் ஜப்பான் 24 ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)



## சாமிக்கவுக்கு தடை



இலங்கை அணியின் வீரர் சாமிக கருணாரத்னவுக்கு, அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாட இலங்கை கிரிக்கெட் சபை ஒரு வருடத்துக்கு ஒத்தி வைக்கப்பட்ட போட்டித் தடை விதித்துள்ளது.

அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருபது- 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் போது போட்டி ஒப்பந்த விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கிரிக்கெட் சபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான குற்றத்தை கருணாரத்ன ஒப்புக்கொண்ட நிலையில் போட்டித் தடைக்கு மேலதிகமாக, 5000 டொலர் அபராதம் விதிக்கவும் இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. (4)

## ரொனால்டோவுக்கு அபராதம்

போர்த்துக்கல் கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு 2 போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், 50,000 ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

ப்ரீமியர் லீக் போட்டியொன்றின்போது ரசிகர் ஒருவரின் தொலைபேசியை தாக்கியமை தொடர்பான விசாரணைகளையடுத்து, இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்கத்தினால் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.



கிறிஸ்டியானோ ரொனால்டோ புதிய கழகமொன்றில் இணைந்த பின் 2 போட்டிகளில் விளையாடுவதற்கான தடை அமுல்படுத்தப்படும்.

உலகக் கிண்ண சுற்றுப் போட்டியில் ரொனால்டோவுக்கு இத்தடை பாதிப்பை ஏற்படுத்தாது. (4)

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 36





ஆனால் இதன் காரணம் என்னவென்பதை நாடும் அறியாது மக்களும் அறியார்கள். மதுராந்தகருக்கு ராஜ்யமாளும் விருப்பம் இருப்பதாகத் தெரிந்தால் அவருடைய உயிருக்கே ஆபத்து வரலாம் என்று பெரிய பிராட்டியார் பயந்தது தான் காரணம்.

"ஆஹா!" "அப்படியா?" என்ற குரல்கள் கூட்டத்தில் எழுந்தன.

"ஆம் பெற்ற தாய்க்குத் தன் ஏக புதல்வன் சிம்மாசனம் ஏற வேண்டும் என்னும் ஆசையைக் காட்டிலும் பிள்ளை உயிரோடு இருக்க வேண்டும் என்ற ஆசை தானே அதிகமாயிருக்கும்? அன்னையின் வாக்கே தெய்வத்தின் வாக்கு என்று மதித்து வந்த மதுராந்தகரும் மனத்தை விரக்தி மார்க்கத்தில் செலுத்தியிருந்தார்.

சிவபக்தியில் முழுதும் ஈடுபட்டிருந்தார். ஆனால் சில காலமாக அவருடைய மனது சிறிது சிறிதாக மாறி வந்திருக்கிறது. இந்தச் சோழ சாம்ராஜ்யம் தமக்கு உரியது, அதைப் பராமரிப்பது தம்முடைய கடமை என்ற எண்ணம் அவருடைய மனத்தில் வேரூன்றி வளர்ந்திருக்கிறது.

நீங்கள் எல்லாம் அவரை ஆதரிப்பதாகத் தெரிந்தால், தக்க சமயத்தில் பகிரங்கமாக முன்வந்து சொல்லவும் சித்தமாயிருக்கிறார்..." "இதற்கு அத்தாட்சி என்ன?" "உங்களுக்கெல்லாம் திருப்தி தரக்கூடிய அத்தாட்சியை இப்போதே அளிக்கிறேன். அளித்தால் அனைவரும் பிரமாணம் செய்யச் சித்தமாயிருக்கிறீர்களா?"

பல குரல்கள் "இருக்கிறோம்! இருக்கிறோம்!" என்று ஒலித்தன. "யாருடைய மனதிலும் வேறு எவ்விதச் சந்தேகமும் இல்லையே?" "இல்லை! இல்லை!"

"அப்படியானால் இதோ அத்தாட்சி கொண்டு வருகிறேன். வணங்கா முடி முனையரையரின் சந்தேகத்தையும் இப்போதே தீர்த்து வைக்கிறேன்!" என்று கூறிக் கொண்டே பழுவேட்டரையர் எழுந்தார். கம்பீரமாக நடந்து அங்கே சமீபத்தில் வைக்கப்பட்டிருந்த மூடு பல்லக்கின் அருகில் சென்றார்.

"இளவரசே! பல்லக்கின் திரையை விலக்கிக் கொண்டு வெளியே எழுந்தருள வேண்டும். தங்களுக்காக உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்யச் சித்தமான இந்த வீராதி வீரர்களுக்குத் தங்கள் முகதரிசனத்தைத் தந்தருள வேண்டும்!" என்று மிகவும் பணிவான குரலில் கூறினார்.

மேல்மாடத்தில் தூண் மறைவில் உட்கார்ந்து ஒரு வார்த்தை விடாமல் அடங்கா ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவன் இப்போது ஜாக்கிரதையாகக் கீழே பார்த்தான். பல்லக்கின் திரையை முன்போலவே ஒரு கரம் விலக்கிற்று. அது பொன் வண்ணமான கரம். முன்னே ஒருமுறை அவன் பார்த்த அதே செக்கச் சிவந்த கரந்தான்.

ஆனால் அவன் முன்னம் வளையல் என்று நினைத்தது உண்மையில் அரச குமாரர் அணியும் கங்கணம் என்பதை இப்போது கண்டான். அடுத்த கணம் பூரண சந்திரனையொத்த அந்தப் பொன் முகமும் தெரிந்தது.

மன்மதனையொத்த ஓர் அழகிய உருவம் பல்லக்கிலிருந்து வெளியே வந்து புன்னகை புரிந்து நின்றது. ஆகா! கண்டராதித்த தேவரின் புதல்வரான இளவரசர் மதுராந்தகரா இவர்! பல்லக்கினுள் இருந்தபடியால் பெண்ணாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் அல்லவா அந்தத் தவறைச் செய்து விட்டோம்? தன்னைப் போல் அதே தவறைச் செய்த ஆழ்வார்க்கடியான் நம்பி சுவர் மேல் தலையை நீட்டிக் கொண்டிருக்கிறானா என்று வந்தியத்தேவன் பார்த்தான். அந்த இடத்தில் மரநிழல் விழுந்து இருள் சூழ்ந்திருந்தது ஆகையால் அங்கு ஒன்றும் தெரியவில்லை.

இதற்குள் கீழே, "மதுராந்தகத் தேவர் வாழ்க! பட்டத்து இளவரசர் வாழ்க! வெற்றி வேல்! வீரவேல்!" என்ற ஆவேசமான முழக்கங்கள் கிளம்பின.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த சீனத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென்ஹோங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு சந்தித்துள்ளது.பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர்களான மதுர விதானகே, பிரேமநாத் சி.தொலவத்த உள்ளிட்ட பலர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான கடன் பிரச்சினை, சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், நேரடி முதலீடு, வரலாற்று உறவு, புதிய ஆற்றல், சுற்றுலாத்துறை மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.(நி)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பட்டின உப அலுவலகம், மானிப்பாய்

வட்டாரம்: 06
வீதி: லோட்டன் வீதி
ஆதன இல : 31/ 4 A (புதிய பதிவிற்கான உத்தேச இல)

வட்டாரம் 06, லோட்டன் வீதியில் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை "பிள்ளையார் கிணற்றடி" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி09 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனமானது ஞானப்பிரகாசம் வீதி, உடுவில் எனும் முகவரியில் வசிக்கும் பசுபதி சீவரத்தினத்திற்கும் பெண் ஜெயரஞ்சினிக்கும் என்பவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு செல்வி.கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 5106ம் இலக்க 20.12.2021ம் திகதிய அறுதி உறுதி மூலம் லிங்கநாயகம் ரமணன் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது.இவ் ஆதனத்தின் தாயுறுதி பிரசித்த நொத்தாரிசு செல்வி.கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 5038 ம் இலக்க 01.10.2021ம் திகதிய நன்கொடை உறுதி மூலம் லிங்கநாயகம் ரமணன் என்பவருக்கு லண்டனை சேர்ந்த செல்லையா சத்தியமூர்த்தியும் பெண் கருணாதேவியும் ஆகியவர்கள் தமது அற்றோணித்துவக்காரர் குமாரசாமி கோபாலகிருஸ்ணன் மூலம் வழங்கியுள்ளார்கள்.இதன் தாயுறுதி பிரசித்த நொத்தாரிசு செல்வி.கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 5037ம் இலக்க 01.10.2021ம் திகதிய உறுதிப்படுத்தல் உறுதி மூலம் லண்டனை சேர்ந்த செல்லையா சத்தியமூர்த்தியும் பெண் கருணாதேவியும் ஆகியவர்கள் தமது அற்றோணித்துவக்காரர் குமாரசாமி கோபாலகிருஸ்ணன் மூலம் இவ் ஆதனத்தின் உரிமையாளர் தாமே என வெளிப்படுத்தியுள்ளார்கள்.நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் வரையப்பட்ட8552 ம் இலக்க 2022.03.03ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் வாதனமானது "பிள்ளையார் கிணற்றடி " நிலப்பரப்பு 01 குளி 09 கொண்ட இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் அவ் உரிமையினை உறுதிப்படுத்தும் உறுதிகள்.ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரித்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராயினும் எவ் உரிமையும் கோரப்படாத விடத்து இவ்வாதனமானது பசுபதி சீவரத்தினத்திற்கும் பெண் ஜெயரஞ்சினிக்கும் என்பவர்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,மானிப்பாய்.**

(13559)


# 2024 முதல் இலங்கையில் அறிமுகமாகும் இலத்திரனியல் அடையாள அட்டை

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு புதிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்க ஆட்பதிவு திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இலங்கை பிரஜை ஒருவரை அடையாளம் காணும் வகையில் சர்வதேச தரத்திற்கமைய இந்த அடையாள அட்டை தயாரிக்கப்படவுள்ளது.ஒருவரை நம்பத்தகுந்த வகையில் அடையாளம் காணுவதற்காக 15 வயது அல்லது அதற்கு மேற்பட்ட குடிமக்களின் சுய விபரங்கள், அவர்களின் உயிரியல் பண்புகள், புகைப்படங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இந்த அடையாள அட்டை தயாரிக்கப்படவுள்ளது.

அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய பின்னர் தேசிய தனிநபர் பதிவேட்டை மத்திய தரவு அமைப்பாக நிறுவுவதற்கும் இதன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தொழில் நுட்ப அமைச்சின் இயக்கும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

புதிதாக வழங்கப்படும் தேசிய இலத்திரனியல் அடையாள அட்டை இல்லாமல் ஒருவர் வங்கி அல்லது நிறுவனத்திற்குச் செல்லும் போது அந்த நபரின் தகவல்கள் தரவு அமைப்பில் இருப்பதால் அவரின் முகத்தை ஸ்கேன் செய்து இலகுவாக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்காக, e-NIC திட்டத்தின் கீழ், உட்கட்டமைப்பு வசதிகளை, ஆட்கள் பதிவுத் துறை மேம்படுத்தி வருகிறது. இதற்கான மொத்த செலவு 12000 மில்லியன் ரூபாவாகும். இதற்கு அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுகிறது. (நி)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில்
ஆளுமை திறனுக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டு கொண்டு இருப்பதால்
இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

* உடல் நலத்திற்கு ⇒எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு ⇒சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
* மன அமைதிக்கு ⇒தியானப்பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு ⇒அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட ⇒தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :26.11.2022 சனிக்கிழமை தொடக்கம் 02.12.2022 வெள்ளிக்கிழமை வரை
நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

தலைமை:- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சீ.முருகானந்தவேல் அவர்கள்
(தலைவர்,யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)

அறிமுகவுரை : மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி மு.சுபாஷினி அவர்கள் (இந்தியா)

பயிற்சிகளை வழங்குபவர்கள் :- துணைபேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன்
துணைபேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்
"பிரம்மஞானம் பயிற்சி"
25.11.2022,26.11.2022,27.11.2022 (வெள்ளி ,சனி ,ஞாயிறு )
ஆகிய தினங்களில் பிரம்மஞானம் பயிற்சிகள் நடைபெறும்

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல 81, சிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில், யாழ்ப்பாணம்
தொ.இல :- 0212222772,0768571395,0771235646,0714403268,0777368745

(சி-5324)



பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பால்நிலை வன்முறைகளை இல்லாதொழிக்க தனி மனித மற்றும் சமூகப் பங்களிப்பும், பொறுப்புணர்வும் இன்றியமையாதது. பொறுப்புணர்ந்து செயற்படுவோம்!."

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

(சி-5323)


# இராசிபலன்

25.11.2022
கார்த்திகை 09 , வெள்ளிக்கிழமை
துதியை பின்னிரவு 1.18 மணிவரை

கேட்டை முன்னிரவு 8.08 மணிவரை
சுபநேரம் -6.12-7.42 மணிவரை
இராகுகாலம் -10.42-12.12 மணிவரை

சந்திராஷ்டமம்
கார்த்திகை,ரோகிணி

**வளவன்**




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தில் எதிர்பாராத குழப்பங்கள் தோன்றி மறையும்.




செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும் நாள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்,பெரிய மனிதர்கள் வீடு தேடி வருலாம்.




வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலாபகரமான நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பெண்கள் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.




வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்,கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், ஆன்மிகச் சிந்தனைகள் மேலோங்கும் நாள்.




அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறலாம்.




வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு.




செயற்பாடுகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், வழிபாடு முன்னேற்றம் தரும், போசன சுகமுண்டு.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், ரோக பயமுண்டு.




மனக்குழப்பம் தீர்த்து மகிழ்ச்சி கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**சந்தேகம் தங்குமிடம் தவறு உள்ள நெஞ்சம் ஆகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவீரர் வாரத்தை முன்னிட்டு கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக மாவீரர்களுக்கு தொடர் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. கடந்த மூன்று தினங்களாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவீரர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம்-சுபேசன்)

# வள்ளுவர் சிலை திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு தெல்லிப் பழை பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட ஜே/247 தையிட்டி கிழக்கு வள்ளுவர் புரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள திருவள்ளுவர் சன சமூக நிலையத்தினரால் நேற்று திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தெல்லிப் பழை பிரதேச செயலக உதவி பிரதேச செயலர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர், வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் வலி. வடக்கு மீள்குடியேற்ற சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-33)

# புத்தக கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்களின் கண்காட்சியும் விற்பனையும் 'எங்கட புத்தகங்கள்' அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஈழத்து எழுத்தாளர்களின் ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட உள்ளன.

எனவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வடமராட்சிப் பிரதேச நூலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கண்காட்சிக்கு வருகைதந்து பயன்பெற வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-6-33)

# 150 தோப்புக்கரணம் போட்ட மாணவி மருத்துவமனையில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-நுணாவில் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலைய் ஆசிரியர் ஒருவர் மாணவிக்கு வழங்கிய தண்டனையால் மாணவி உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர் நேற்று முன்தினம் புதன் கிழமை மாணவி ஒருவரை 150 தடவைகள் தோப்புக் கரணம் போடுமாறு தண்டனை வழங்கியுள்ளார்.

அதிக தடவைகள் தோப்புக் கரணம் போட்டதால் பாதிக்கப்பட்ட மாணவி சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பகுதியில் உள்ள மகளிர் கல்லூரி ஒன்றில் கற்கும் 11 வயதான சிறுமியே இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் கல்விநிலைய ஆசிரியரை பொலிஸார் விசாரணைக்காக அழைத்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)

# உணவகங்கள் மீது திடீர் பரிசோதனை



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர், மின்சாரநிலைய வீதியில் அமைந்துள்ள உணவகங்கள், ஆஸ்பத்திரி வீதியில் உள்ள உணவகங்களில் யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் நேற்று திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களின் உரிமையாளர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

அத்தோடு சுகாதார சீர்கேடான முறையில் வைத்திருந்த உணவுப்பொருட்கள் உரிமையாளர்களின் சம்மதத்துடன் பொது சுகாதார பரிசோதகர்களால் அழிக்கப்பட்டன.

அத்துடன் திகதி காலாவதியான உணவுப் பொருட்கள் வைத் திருந்த உணவகங்கள் மீது வழக்கு தாக்கல் செய்வதற்கு பொது சுகாதார பரிசோதகர்கள் தீர்மானித்துள்ளனர். (4-6-33)

# ஆசிரியரை தாக்கியவர் சரணடைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியரை தாக்கிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த அப்பாடசாலை மாணவனின் தந்தை நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

ஒஸ்மானியா கல்லூரிக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை அத்துமீறி நுழைந்து, ஆசிரியர் மீது தாக்குதலை மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்ததுடன், சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து இருந்தனர். இந் நிலையில் சந்தேகநபர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சரண் அடைந்துள்ளார். (4-6-33)

# பொலிஸாரின் சமிக்ஞையை மீறியவருக்கு சிறை

(கரணவாய்)

பொலிஸாரை ஏமாற்றி விட்டு மோட்டார் சைக்கிளுடன் தப்பிச் சென்றவருக்கு ஒரு மாதகால சிறைத்தண்டனை விதித்தது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் பருத்தித்துறை போக்குவரத்து பொலிஸார் வீதிக் கடமையில் இருந்த போது வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றவரை மறித்த போது நிறுத்தாது சென்றுள்ளார்.

இலக்கத்தை குறிப்பெடுத்த பொலிஸார் மோட்டார் சைக்கிளின் உரிமையாளரை கண்டுபிடித்து நேற்று முன் தினம் புதன்கிழமை பருத்தித் துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இதனை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் மேற்படி குற்றத்திற்காக 45 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்ததுடன் ஒரு மாத கால சிறைத் தண்டனையையும் விதித்து தீர்ப்பளித்தார். (4-6-60)

# கைக்குண்டு மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஏ9 வீதி ஓரம் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்தே குறித்த கைக்குண்டு அடையாளம் காணப்பட்ட நிலையில் காணி உரிமையாளரால் இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டு, பொலிஸார் கைக்குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# திருடப்பட்ட மாடு பொதுமக்களால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் திருடப்பட்ட மாடொன்று தொண்டைமானாறு பகுதியில் உள்ள பற்றைக்காடொன்றினுள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

அரியாலை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கடந்த 21 ஆம் திகதி மாடொன்று திருடப்பட்டுள்ளது. அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்படிருந்தது. இந்நிலையில், தொண்டைமானாறு பகுதியில் உள்ள பற்றைக்காடு ஒன்றில் மாடு ஒன்று மறைத்து கட்டப்பட்டிருந்த நிலையில் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டு அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டது.

அதன் அடிப்படையில் அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த மாடு அரியாலை பகுதியில் திருடப்பட்ட மாடு என கண்டறிந்துள்ளனர்.

அத்துடன் மாட்டினை திருடியவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். குறித்த மாட்டினை இறைச்சியாக்கும் நோக்குடனேயே பற்றைக் காட்டிற்குள் கட்டப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப் பட்டது. (4-6-33)

# பாடசாலை மாணவர்களுக்கு தலைக்கவசம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

தலைக்கவசம் இல்லாது மோட்டார் சைக்கிளில் சென்ற மாணவர்களுக்கு அலியான்ஸ் காப்புறுதி நிறுவனத்தினால் நேற்றுமுன்தினம தலைக்கவசம் வழங்கி வைக்கப் பட்டது.

வீதி விபத்துக்கள் தற்போது அதிகரித்து வரும் நிலையில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்தோனேசிய பூகம்பம்

# இடிபாடுகளில் சிக்கிய சிறுவன் 2 நாட்களின் பின் உயிருடன் மீட்பு



(ஜகார்த்தா)

இந்தோனேசிய பூகம்ப இடிபாடுகளில் சிக்கிய 6 வயது சிறுவன் 2 நாட்களுக்கு பின்னர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவா தீவில் உள்ள சியாஞ்சூர் நகரில் கடந்த திங்கட்கிழமை சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 5.6 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தினால் வீடுகள், அலுவலகங்கள், கடைகள் உள்ளிட்ட பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இதில் 162 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. 700இற்கும் கூடுதலானோர் காயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதற்கான பணிகள் தொடர்ந்து நடந்தது. அந்த வகையில் நேற்று முன்தினம் காலை இடிபாடுகளில் இருந்து மேலும் 90 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இதனால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 252 ஆக உயர்ந்தது.

இந்நிலையில் தற்போது இந்த பூகம்பத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 271 ஆக உயர்ந்துள்ளது. இறந்தவர்களில் பலர் குழந்தைகள். மேலும் 100 இற்கும் மேற்பட்டோரை காணவில்லை. நக்ராக் கிராமத்தில் நடந்த தேடுதல் பணியில், நிலநடுக்க இடிபாடுகளில் சிக்கிய 6 வயது சிறுவனை மீட்பு பணி உயிருடன் மீட்டது.

இந்த இடிபாடுகளில் 2 நாட்களாக சிக்கியிருந்த அந்த சிறுவனை இந்தோனேசிய தேசிய பேரிடர் மேலாண் கழகம் மீட்டுள்ளது. எனினும், இந்த நிலநடுக்கத்தில் சிறுவனின் பாட்டி உயிரிழந்துவிட்டார். அவரது உடல் அருகிலேயே சிறுவன் கிடைத்துள்ளார். சிறுவனின் பெற்றோரின் உடல்கள் முன்பே மீட்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொதுமக்களுக்கு கசையடி ஆப்கானில் சம்பவம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உள்ள கால்பந்து மைதானத்தில், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் 3 பெண்கள் உட்பட 12 பேர் சரமாரியாக தாக்கப்பட்டனர்.

விபச்சாரம், கொள்ளை மற்றும் ஓரினச் சேர்க்கை உள்ளிட்ட தார்மீகக் குற்றங்களில் இவர்கள் ஈடுபட்டதாக தலிபான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு மாதத்தில் தலிபான்களால், பகிரங்கமாக கசையடி வழங்கப்படுவது இது இரண்டாவது முறையாகும். அத்துடன், இந்த நடவடிக்கை 1990களில் முந்தைய தலிபான் ஆட்சியில் காணப்பட்ட கடுமையான நடைமுறைகளுக்குத் திரும்புவதைக் குறிக்கும்.

இஸ்லாமிய சட்டத்தின் இந்த விளக்கத்தில் பொதுவாக மரணதண்டனை, பொதுவாக உறுப்புகளை வெட்டுதல் மற்றும் கல்லெறிதல் ஆகியவை அடங்கும். இருப்பினும் சரியான குற்றங்கள் மற்றும் அதற்கான தண்டனைகள் தலிபான்களால் அதிகாரபூர்வமாக வரையறுக்கப்படவில்லை. (நி)

## உக்ரைனின் மகப்பேற்று மருத்துவமனை மீது ரஷ்யா தாக்குதல் -குழந்தை பலி

(கீவ்)

சபோரிஜியா பகுதியில் உள்ள வில்னியான்ஸ் என்ற நகரின் மகப்பேற்று மருத்துவமனை மீது ரஷ்யா தாக்குதலை மேற்கொண்டது என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது தாய் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார்.

ரஷ்யா ஒன்பது மாத போரினால் சாதிக்க முடியாததை பயங்கரவாதம், கொலை மூலம் சாதிக்க முயல்கின்றது. அது ஒருபோதும் சாத்தியமாகாது என உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

# ஜெருசலேமில் குண்டுத் தாக்குதல்

### ஒருவர் பலி, 14 பேர் காயம்



(இஸ்ரேல்)

ஜெருசலேமில் உள்ள பேருந்து நிலையங்களை குறிவைத்து நடத்தப்பட்ட இரண்டு தனித்தனி குண்டு தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 14 பேர் காயமடைந்துள்ளதாக இஸ்ரேலிய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

புறநகரில் உள்ள பேருந்து நிலையத்தில் முதல் குண்டுவெடிப்பும் இரண்டாவது குண்டுவெடிப்பு நகரின் மற்றொரு பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதலாவது குண்டு வெடிப்பில் 11 பேர் காயமடைந்ததாகவும் அதில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் இரண்டாவது குண்டு வெடிப்பில் மூன்று பேர் காயமடைந்துள்ளதாகவும் இஸ்ரேலிய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்குக் கரையில் பல குண்டு தாக்குதல் நடத்தப்பட்டு வரும் நிலையில் இந்த குண்டு தாக்குதல் பாலஸ்தீனத்தின் தாக்குதலாக இருக்கலாம் என இஸ்ரேல் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (நி)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா:28 ½ சூரி 3 செவ் 11 இல்<br>தகைமை/தொழில்:A/L கட்டடக்கலைஞன்<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/13142 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா:சூரி 10 செவ் 12 இல்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/13192 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா:சூரி 1 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: A/L (அரச வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்)<br>எதிர்பார்ப்பு:வேலைபார்க்கும் பெண்<br>தொ.இ: B/13143 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:மூலம் 1<br>கி.பா:61 ¼ சூரி 10 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:நிரந்தர தொழில்<br>தொ.இ:G/13195 |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா:50 சூரி 6 செவ் 9 இல்<br>உயரம்:5' 9"<br>தகைமை/தொழில்: A/L(தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13148 | பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 3<br>கி.பா:சூரி 3 செவ் 10 இல்<br>உயரம்:155 cm<br>தகைமை/தொழில்: BSc ,MBA அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/13200 |
| பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா:17 சூரி 11 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்:A/L (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13149 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா:45 சூரி 1 செவ் 9 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: HND<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/9102 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## மூதாளர் அன்பு இல்லத்தில் முதியோரை இணைத்துக் கொள்ளல்

சைவத் தமிழ்ச்சங்கம் - அருள்மிகு சிவன் கோவில்
அன்பே சிவம் அறக்கட்டளை
சிவபுரவளாகம் - மூதாளர் அன்பு இல்லம்
மூதாளர் அன்பு இல்லத்தில் இணைந்து
வாழ விருப்புடையோர்
" பெற்றோரைப் பேணுதல் பிள்ளைகளின் கடமை"

- இல்லத்தில் வாழ்வதற்கு 60 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட தனித்து வாழும் மூதாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பங்களை A9 வீதி, முகமாலை சிவபுர வளாகத்தில் பெற்று பூரணப்படுத்தி பாதுகாவலர் அல்லது உறவினர் மூலமாக இணைந்து கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு: (C-5318)

நிறைவேற்றும் பணிப்பாளர்
சிவபுர வளாகம்
A-9 வீதி, முகமாலை, பளை.

நிறைவேற்றுப் பணிப்பாளர்
திரு.குமரேசன் குமார்
077 622 4038


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்கேள்வி அறிவித்தல்-2023

## கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2023.01.01- 2023.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2022.11.25 - 2022.12.08**
**(அலுவலக நாட்களில் மு.ப 09.00 - பி.ப 01.00)**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி :- 2022.12.09 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி**
**கேள்வி திறக்கும் திகதி :- 2022.12.09 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி**
**கேள்விதிறக்கும் இடம் :- கரைச்சி பிரதேசசபை தலைமை அலுவலகம்.**

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2022.12.09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்வி பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
கேள்விகள் யாவும் 2022.12.09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விகாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | | சேவைச்சந்தை -கிளிநொச்சி | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மீன், கருவாடு, முட்டை | 50,000.00 | 1,000.00 | 3,033,861.00 |
| 2 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 46,965.60 |
| | | கிளிநகர்ப் பகுதி | | |
| 1 | கிளிநொச்சி பசுமைப் பூங்கா அழகுக்கலை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 24,120.00 |
| 2 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 2,000.00 | 1,000.00 | 102,873.60 |
| 3 | மருதநகர் இயற்கை பூங்கா | 1,000.00 | 1,000.00 | 29,500.00 |
| | | பொதுச்சந்தை – பரந்தன் | | |
| 1 | பரந்தன் சந்தை | 1,000.00 | 1,000.00 | 49,365.00 |
| | | பொதுச்சந்தை- வட்டக்கச்சி | | |
| 1 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 3,000.00 | 1,000.00 | 155,000.00 |
| 2 | இராமநாதபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 168,123.60 |
| | | பொதுச்சந்தை- இரணைமடு | | |
| 1 | இரணைமடு கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 422,849.70 |
| | | கனகாம்பிகைக்குளம் | | |
| 1 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 1,000.00 | 1,000.00 | 3,960.00 |
| | | பொதுச்சந்தை- உருத்திரபுரம் | | |
| 1 | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 9,390.60 |
| 2 | D10உருத்திரபுரம். மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 297,300.00 |
| 3 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 265,500.00 |
| | | பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம் | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 5,000.00 | 1,000.00 | 244,388.70 |
| | | பொதுச்சந்தை- தருமபுரம் | | |
| 1 | தருமபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 51,794.00 |
| | | பொதுச்சந்தை- கல்லாறு | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 46,766.70 |
| | | வன்னேரிக்குளம் | | |
| 1 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 1,000.00 | 1,000.00 | 48,100.00 |
| | | பொதுச்சந்தை- கண்டாவளை | | |
| 1 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 32,000.00 |
| | | பொதுச்சந்தை- முரசுமோட்டை | | |
| 1 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 41,017.00 |
| | | பொதுச்சந்தை- அக்கராயன் | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 59,173.20 |
| | | பொதுச்சந்தை- புன்னைநீராவி | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 180,000.00 |
| 2 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 144,198.00 |

### நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்தத் தவறிய வர்களும் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்ப தற்கோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
7. சித்தியடையும் கேள்விகார்ரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை குறித்த காலத்திற்குள் (ஆகக்கூடியது ஒருவார காலத்தினுள்) செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
8. இறைச்சி கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அம்மாத இறுதிக்குள் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 15% தண்டப் பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
10. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைக் கட்டணங்கள் செலுத்தத் தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப் பேற்கப்படும்.
11. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை, இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணத் திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.
12. துவிச்சக்கர வண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 10.00 உம் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.20.00 உம் முச்சக்கர வண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கும், கனரக வாகனங்களுக்கும் ரூபா 50.00 உம் மட்டுமே அறவிட முடியும்.
13. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது தற்போது பாவனையிலுள்ளவாறு 3% வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
14. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்கு படுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02 ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தகமானிப் பத்திரிகையின் (அதி விஷேசமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.
15. ஆரம்பகேள்வி தொகையை விட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
16. சபையால் கட்டப்பட்ட கடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடை கட்டப்படும்வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டி வழங்கப்படவில்லை என்றகாரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.
17. இறைச்சிகடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.
18. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை தவிசாளர்/செயலாளரினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைகாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
19. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
20. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராகவோ தவிசாளர்/செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றநடவடிக்கை எதனையும் மேற்கொள்ளமுடியாது.

**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-5325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இந்த சமூகம் உங்களுக்கு சுதந்திரமான உணர்வை தராத வரை, சட்டம் எத்தகைய விடுதலையை உங்களுக்கு அளித்தாலும் அதனால் பயன் இல்லை. ~ அம்பேத்கர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனப் பிரச்சினையை தீர்க்காவிட்டால்...

அதிகாரப் பகிர்வு வழங்குவதற்கு நீங்கள் சம்மதமா? என்ற கேள்வியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வைத்து கேட்டமை இலங்கைப் பாராளுமன்ற அரசியலில் ஒரு புதிய அணுகுமுறை எனலாம்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் எதுவும் செய்ய முடியாதென்ற உண்மையை சிங்கள ஆட்சியாளர்களும் அரசியல் தரப்புகளும் நன்கு உணர்ந்துள்ளன.

அந்தளவுக்கு நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாயிற்று.

அதேவேளை இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாததால் சர்வதேச அரங்கில் மதிப்பிழந்த ஒரு நாடாக இலங்கை அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, இலங்கையில் நடக்கின்ற காணி வழக்குப்போல ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நீண்ட காலம் இலங்கைக்குத் தவணை இடப்படுகிறது.

தவிர, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள். உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கின்றோம் என ஏலவே சில நாடுகள் உறுதிமொழி வழங்கியிருந்தன.

எனினும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுபோல நடித்துக் காலம் கடத்திய சிங்கள ஆட்சியாளர்கள் காரணமாக மேற்போந்த உறுதிமொழியை வழங்கிய நாடுகள் இலங்கைக்கு உதவ மறுக்கின்றன.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாட்டின் பொருளாதாரமும் அதலபாதாளத்தில் வீழ்ந்துவிட, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் இலங்கைக்கு விமோசனம் இல்லை என்ற உண்மை உணரப்பட்டுள்ளது.

இந்த உண்மையை முதலில் சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டதனாலேயே அவர்கள் ராஜபக்ஷ தரப்பின் ஆட்சியை இல்லாது செய்யப் பெரும் போராட்டம் நடத்தினர்.

இந்தநிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி வலியுறுத்தி வருகின்றார்.

அந்தவகையில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கூறியதோடு அதிகாரப் பகிர்வு வழங்குவதற்கு நீங்கள் சம்மதா? என்ற கேள்வியோடு அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களை நோக்கினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்ட பிரஸ்தாப கேள்விக்கு இல்லை என்ற பதில் எவரிடமும் இல்லை.

ஆக, பாராளுமன்றத்தில் வைத்து எழுப்பப்பட்ட பிரஸ்தாபக் கேள்வி ஒரு திருப்புமுனை என்பதுடன் ஏதோவொரு வகையில் இனப்பிரச்சினையைத் தீர்த்தாக வேண்டும் என்ற அவர்களின் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தி நிற்கிறது.

# முப்படையினரும் அரசுக்கு எதிராக விரைவில் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்

## பாராளுமன்றத்தில் இரா.சாணக்கியன்

(கொழும்பு)

வெகுவிரைவில் முப்படையினரும் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "இனி போராட்டத்தில் ஈடுப்பட்டால் இராணுவத்தை கொண்டு போராட்டத்தை அடக்குவேன் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இலங்கை சிவில் பிரஜைகள் தான் இராணுவத்திலும், பாதுகாப்பு தரப்பிலும் சேவையாற்றுகிறார்கள் என்பதை ஜனாதிபதி தெரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவத்தினரும் பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும். இராணுவத்தை கொண்டு போராட்டத்தை அடக்க வேண்டுமாயின் ஜனாதிபதி இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்து இராணுவத்தை வரவழைக்க நேரிடும்.

இராணுவத்தினரும் பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ளார்கள்.

வெகுவிரைவில் முப்படையினரும் போராட்டத்தில் ஈடுப்படுவார்கள். ஆகவே போராட்டத்தை முடக்குவது குறித்து அவதானம் செலுத்துவதை விடுத்து பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண அவதானம் செலுத்து மாறும், அதற்கு கட்சி என்ற ரீதியில் ஒத்துழைப்பு வழங்குவதாக குறிப்பிட்டுள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை மாத்திரமல்ல, இராணுவத்தையும் இல்லாதொழித்து சென்றுள்ளார் என இராணுவத்தினர் குறிப்பிடுகிறார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ கால்வாய், சுத்தப்படுத்துவதற்கும், கட்டடம் அமைப்பதற்கும், வீதி நிர்மாணிப்புக்கும் இராணுவத்தை பயன்படுத்தினார்.

அமுதா கத என்ற விசேட படையணியை உருவாக்கி 40 ஆயிரம் பேரை இணைத்துக்கொண்டு தனது இராணுவ நிலைப்பாட்டை மேம்படுத்தினார்.

இதன்பிறகு விவசாயத்துறை தொடர்பில் படையணியை ஸ்தாபித்து விவசாயத்தையும் முழுமையாக இல்லாதொழித்தார்.

நான் இராணுவத்தை அவமதிக்கும் வகையில் செயற்படவில்லை. இன்று இராணுவத்திற்காக வரிந்து கொள்பவர்கள் இராணுவத்தின் சம்பளம் தொடர்பில் கருத்துரைக்கவில்லை.

2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இராணுவத்தினரது சம்பள அதிகரிப்புக்காக 20 பில்லியன் ரூபா மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினராகிய எமக்கு ஒன்றும் தெரியாது: தெரிந்தவர்களினால் நாடு சீரழிந்துள்ளது. இருப்பதையும் சீரழிக்க வந்துள்ளார்கள். இராணுவத்தினரை விற்றுப் பிழைத்து அரசியல் செய்யும் தரப்பினர் இராணுவத்தினரது சம்பளம் பற்றி கருத்துரைகவில்லை." எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## லொத்தர் சீட்டு வாங்கிய ஜனாதிபதி

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் கீழ் சீட்டிழுக்கப்படும் மஹஜன சம்பதவின் 5000ஆவது சீட்டிழுப்பை முன்னிட்டு நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மஹஜன சம்பத டிக்கட் ஒன்றினை கொள்வனவு செய்துள்ளார்.

இந்நிகழ்வு பாராளுமன்ற வளாகத்தில் இடம் பெற்றிருந்தது. நிகழ்வில் ஜனாதிபதி ரணிலுக்கு குறித்த லொத்தர் சீட்டை தேசிய லொத்தர் சபையின் பதில் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் டி பெரேரா வழங்கி வைத்தார். (ம-7)

## வைரஸ் நோய் பரவுவதனால் மீண்டும் முகக்கவசம் அணிவது கட்டாயம்

(கொழும்பு)

இன்புளுவன்சா போன்ற அறிகுறிகளுடன் கூடிய வைரஸ் நோய் நாடளாவிய ரீதியில் பரவி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ள நிலையில் முகக்கவசம் அணிவது அவசியமானது என விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் கூறியுள்ளார்.

எனினும் கொரோனாவுடன் ஒப்பிடுகையில், இந்த நோயினால் ஏற்படும் சிக்கல்கள் குறைவாகவே காணப்படுவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் இந்நோய், ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவக்கூடியது.

எனவே சரியான சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுவது மற்றும் முகக்கவசம் அணிவது அவசியமானது என விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வவுனியா நகர்ப்பகுதியில் விபசாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது

(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதியில் விபச்சார தொழிலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 3 பெண்களை வவுனியா பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய வவுனியா நகர்ப்பகுதியில் நேற்று சோதனைகளை மேற்கொண்ட வவுனியா போதை ஒழிப்பு பொலிஸார் விபசார தொழிலில் ஈடுபட முயற்சித்த குற்றச்சாட்டில் 3 பெண்களை கைது செய்துள்ளனர்.

செட்டிகுளம், . கிளிநொச்சி, காலி ஆகிய பகுதிகளை சேர்ந்த பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ம-7,299)

## உழவு இயந்திர சாரதி தெல்லிப்பழையில் கைது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீதியில் சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரம் இன்றி மண் ஏற்றிவந்த உழவு இயந்திரத்துடன், உழவு இயந்திர சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரினால் குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அச்செழு பகுதியைச் சேர்ந்த சாரதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், மண் ஏற்றி வந்த உழவு இயந்திரத்துடன் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப் பட்டார். (ம-7,104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பர்ாமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** நெளுங்குளம் நீர் ,வழங்கல் சபை, றந்தெனிய கல்லுடைக்கும் ஆலை, அறுகம்புல்வெளி, அவறந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பாரதிபுரம், கூமாங்குளம், நாகரிலுப்பைக்குளம்,நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பழையனூர், பாண்சின்னக்குளம், பாவற்குளம், பெரிய உளுக்குளம் தீவ ரகம, பொன்னாவரசங் குளம், இராஜேந்திர குளம், சாம்பல்தோட்டம் வீட்டுத் திட்டம், சூடுவெந் தபுலவு தொலைத் தொடர்பு கோபுரம், சூடுவெந்த புலவு , துடாரிக்குளம், ட்ராக் 07, ஒளுக்குளம், ஒளுக்குளம் எல்.பி குடியிருப்பு, விநாயபுரம் வீட்டுத் திட்டம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகளே என் தேவாலயங்கள்."

*... முன்னாள் ஜனாதிபதி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி உத்தியோகத்தரின் இடமாற்றத்தை எதிர்த்து பொதுமக்கள் போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா இராசேந்திரங்குளம் சமுர்த்தி உத்திரோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள இட மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்று காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராசேந்திரங்குளம், விநாயகபுரம், பாரதிபுரம், பொன்னாவரசன்குளம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய சமுர்த்தி உத்தியோகத்தர் குறித்த பகுதியில் கடமையேற்று 3 வருடங்களாகிய நிலையில் தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்தே குறித்த கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இதன்போது வவுனியா தெற்கு பிரதேசசபை உறுப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் பொதுமக்களால் வழங்கப்பட்ட மகஜரையும் பெற்றதுடன், அதனை அரசாங்க அதிபரிடம் சேர்ப்பிப்பதாகவும் உறுதிமொழி வழங்கியதை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.(4-6-299)

# விலங்கு வேட்டையில் ஈடுபட்டவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட சாந்தபுரம் பகுதியில் நேற்று முன்தினம் மான் கொம்பு, துப்பாக்கிரவைகள்,மிருகங்களுக்கு வைக்கப்படும் வெடிமருந்துகள் (வெங்காய வெடி), சுருக்கு கம்பிகள்,மயக்க மருந்துகள் என்பனவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை கிளி நொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினர். தெரிவித்துள்ளார். (4-6-316)

# போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்த பொலிஸார்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராஞ்சி இலவன் குடா கடற்பரப்பில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பண்ணைகளை அகற்றுமாறு தெரிவித்து அப்பகுதி மக்கள் 55 ஆவது நாளாக கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களில் இருவர் ஜெயபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் எந்தவித அறிவித்தல் இல்லாதும், பிடியாணை இன்றியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக போராட்டத்தில் மக்கள் யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடும் செய்துள்ளனர். (4-6-100)



சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் பெரியமுறிப்பு கிராமத்தில் உள்ள தேவைப்பாடுடைய 95 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்:-சுபேசன்)



பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் "சிறுவர் தூரிகை" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட ஓவியக்கண்காட்சி நேற்று வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அப்பாடசாலையின் அதிபர் க.சிவதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

## முத்திரைகளின் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் வெளிவந்த முத்திரைகளின் கண்காட்சியும் விற்பனையும் கொக்குவில் தபாலதிபரின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை சுன்னாகம் பொது நூலகத்தில் இடம் பெறவுள்ளது. (4-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 380 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 180 | 200 |
| தக்காளி | 350 | 300 | 320 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 150 |
| கோவா | 250 | 250 | 280 | 300 |
| கரட் | 300 | 450 | 480 | 500 |
| பூசணி | 120 | 160 | 120 | 140 |
| புடோல் | 250 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 160 | 150 | 130 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 600 | 600 | 800 |
| பெரிய வெங்காயம் | 250 | 330 | 240 | 260 |
| பாகற்காய் | 600 | 500 | 450 | 500 |
| வெண்டக்காய் | 150 | 160 | 150 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 500 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 | 450 |
| பீற்றூட் | 280 | 300 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 800 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 | 800 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 160 | 180 | 250 | 200 |
| தேசிக்காய் | 400 | 250 | 250 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | 260 | 300 |
| வெங்காயப்பூ | 550 | 400 | 400 | 520 |
| முள்ளங்கி | 120 | 140 | 160 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 45 | 40 |
| ஈரப்பலா | 80 | 140 | 120 | 120 |

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நேற்று முன்தினம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் தருமபுரம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 18.5 லீற்றர் கசிப்பும் 156 லீற்றர் கோடாவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொண்டு கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்தார். (4-6-316)

## நினைவு தினக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஆரம்ப பொதுச் செயலாளர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 33 ஆவது ஆண்டு நினைவு தினக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.30 மணியளவில் இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் தோழர் பி.முத்துலிங்கத்தின் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் நினைவுச் சிறப்புரையினை யாழ். பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் தலைவர் கலாநிதி. சு.ஜீவசுதன் "உயர்கல்விப்புலத்தில் சாதிய நடை முறைகளும் சமூகப் பிரதிபலிப்பும்" என்ற தலைப்பில் ஆற்றவுள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை தாக்கி...

நேற்று மாலை மண்வெட்டிப் பிடி வெட்டுவதற்காக சென்ற வேளையிலே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இந்த அனர்த்தத்தில் வவுனியா மெனிக்பாம் கிராமத்தை சேர்ந்த ஒட்டு சுட்டான் சின்னச்சாளம்பனில் வசித்து வருகின்ற பச்சைமுத்து புலேந்திரன் (வயது-48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7)

# வவுனியாவில்...

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் நேற்றுக் காலை பேருந்து - டிப்பர் மோதி விபத்துக்குள்ளானதில் டிப்பர் சாரதி மற்றும் பேருந்தில் பயணித்த பயணிகள் உட்பட பத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தங்காலையிலிருந்து யாழ் நோக்கி வந்துகொண்டிருந்த சென்ற பேருந்தும் மாங்குளத்திலிருந்து கனகராயன் குளம் நோக்கி சென்ற டிப்பரும் மோதிக் கொண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் டிப்பர் வாகன சாரதி உட்பட பேருந்தில் பயணித்த பயணிகளும் காயமடைந்த நிலையில் 6 பேர் மாங்குளம் மற்றும் 4 பேர் வவுனியா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250,299)

# மன்னார் நீதி...

இடைக்கால கட்டளையை வழங்கியது.

மன்னார் நகரபிதா உள்ளிட்ட 6 பேரின் பெயர்களுடன் ஏனையவர்களும் என பொலிஸார் மனுவை முன்வைத்தனர்.

மன்னார் ஆண்டாங்குளம், விடத்தல்தீவு, ஆட்காட்டிவெளி உள்ளிட்ட பிரதேசங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர் துயிலும் இடங்களாகக் கொண்டு நினைவேந்தல் நிகழ்வுகளை நவம்பர் 27ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அடம்பன் பொலிஸார் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளனர். (ம-7,33)

# சாவகச்சேரியை...

துள்ளார்.

அண்மையில் கப்பல் மூலம் கனடா செல்ல முற்பட்டு வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் சாவகச்சேரியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்திருப்பதாக வியட்நாம் தூதுவராலயம் சார்பாக குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சாவகச்சேரியை சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரன் என்ற 32 வயதான குடும்பஸ்தரே மரணமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் பொருளாதார சூழல் காரணமாக புலம்பெயர முயற்சித்ததாக குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

இவருக்கு பிறந்து ஆறு மாதங்களேயான பெண் குழந்தையும் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

# அதிகாரப் பகிர்வு...

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில்பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகார பகிர்வு தொடர்பில் பாராளுமன்றத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்தை இந்தியா பலவந்தமான முறையில் அமுல்படுத்தியது. இலங்கையர்கள் அதனைக் கோரவில்லை.

மக்களின் எதிர்ப்பிற்கு மத்தியில் தான் 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அப்போதைய ஜனாதிபதி ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி, அதிகாரத்தை பிரயோகித்து அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றினார். ஆகவே 13 ஆவது திருத்தத்திற்கும் நாட்டு மக்களுக்கும் இடையில் தொடர்பில்லை.

அதிகார பகிர்வுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை, அதிகார பரவலாக்கம் குறித்து அவதானம் செலுத்தலாம். ஒற்றையாட்சி நாட்டில் அதிகாரப் பகிர்வுக்கு இடமில்லை. சமஷ்டியாட்சி நாடுகளில் மாத்திரம் தான் அதிகார பகிர்வு சாத்தியமாகும்.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க சிங்கள இனம் உயிர் தியாகம் செய்துள்ளது. சோழர், பாண்டியன் மற்றும் ஆங்கிலேயர்களிடம் இருந்து நாட்டைப் பாதுகாக்க சிங்களவர்கள் போராடினார்கள், உயிர்த் தியாகம் செய்தார்கள். ஆகவே அதிகார பகிர்வு என்ற சொற்பதம் ஊடாக நாட்டை பிளவுபடுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனும் இந்த நோக்கத்துடன் செயற்பட்டார்.

ஒருமைப்பாட்டை பாதுகாக்க 29 ஆயிரம் இராணுவத்தினர் உயிர்த் தியாகம் செய்தார்கள்.

பாதுகாக்கப்பட்ட ஒருமைப்பாட்டை ஒவ்வொருவரின் தேவைக்காக மலினப்படுத்த முடியாது. மாகாண சபைக்கு முழுமையாக எதிர்ப்பை தொடர்ந்து வெளிப்படுத்துவேன்.

மாகாண சபை என்பது வெள்ளை யானை. ஒவ்வொரு இனத்தவரின் தேவைக்காக நாட்டை பிளவுபடுத்த முடியாது, இலங்கையர்கள் என்ற அடிப்படையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே நாட்டை முன்னேற்ற முடியும்" என்றார். (ம-7)

# ஈஸ்...

வித்துள்ளார்.

தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பொறுப்பேற்க வேண்டும் என சிலர் கோரிக்கை விடுக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# சபை...

பாதுகாப்பு அமைச்சின் வரவு செலவுத் திட்டம் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ம-7)

# 5 பேர்...

214 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் இவர்கள் மன்னாரிலிருந்து படகின் மூலம் இந்தியாவுக்கு புறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வேலையின்மை உச்சத்தில் இருப்பதாக இந்த ஐந்து பேரைக் கொண்ட குடும்பத்தின்தலைவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# போலி இரசாயன பசளைகள் மீட்பு

அம்பாறை - நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டப்பள்ளம் பிரதேசத்தில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் மறைத்து வைத்து கலப்படம் செய்யப்பட்ட 1.5 தொன் எடையுள்ள போலி இரசாயனப்பசளைகளை இராணுவபுலனாய்வு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்று இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து குறித்த பிரதேசத்தில் பதுக்கப்பட்டிருந்த போலி இரசாயனப் பசளைகள் கைப்பற்றப்பட்டன. (ம-7)

# புலிகள்...

உரையாற்றியபோதே பாராளுமன்ற உறுப்பினர் இதனை தெரிவித்தார்.

மதுபாவனையற்ற, புகைத்தல் பழக்கமற்ற, காதல் கொள்ளாமை போன்ற விடயங்களுடன் ஒழுக்கமாக செயற்பட்ட அமைப்பு விடுதலைப் புலிகள் அமைப்பு என எஸ்.பி.திசாநாயக்க சபையில் முன்னதாக தெரிவித்தார்.

இதனையிட்டு தமிழர் சமூகம் பெருமை அடைவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குறிப்பிட்டார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1404
கும்பம் 9 3 3 6 7 6

தன நிதானய
திகதி - 2022.11.24
சீட்டிழுப்பு இலக்கம் - 979
N 03 05 30 64

கொவிசெத
திகதி 2022.11.24
சீட்டிழுப்பு இலக்கம் 3191
T 14 25 42 44
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1297
T 09 14 29 30 78

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.24
சீட்டிழுப்பு இலக்கம் 258
ரிஷபம் 20 28 31 35 ரிஷபம்

மஹஜன சம்பத
திகதி 2022/11/24
சீட்டிழுப்பு இலக்கம் 4949
X 5 6 3 1 3 5

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1924 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.11.24 தினம் வியாழக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,639,240/-
S 12 48 53 64
3679 830

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.24
சீட்டிழுப்பு இல : 4085
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,703,760/-
54 56 72 75 D

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,399,937.20
திகதி 2022-11-24
வெற்றி வாரம் 3636
வர்ணம் கபிலம்
09 13 20 32 கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,291,740/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 04 11 22 41 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 280,083,083.80
சீட்டிழுப்பு வாரம் 1100
செம்மஞ்சள்
2022.11.24 வியாழக்கிழமை
011-2 333 546-47 Web: www.dlb.lk

சம்பத் வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 547 திகதி 2022-11-24 வர்ணம் நீலம்
B 42 64 65 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14,467,532/-
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1750
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.11.24
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,921,300/-
15 38 44 62 J


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்தால் மரணதண்டனை

(கொழும்பு)

திருத்தம் செய்யப்பட்டுள்ள நச்சு பொருள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் சட்டம் இன்று (நேற்று) முதல் அமுலில் இருக்கும்.

இதன்படி, ஐந்து கிராம் 'ஐஸ்' எனப்படும் கிரிஸ்டல் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளை வைத்திருந்த எவருக்கும் மரண தண்டனை விதிக்க உயர். நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளதாக நீதிமற்றும்சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

"குற்றம் நிரூபிக்கப்பட்டால், அத்தகைய நபர் நேற்று (ஏப்ரல் 23) அமுலுக்கு வந்த விஷம், அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் (திருத்தம்) சட்டம் 2022 இன் 41 இன் கீழ் மரண தண்டனையை எதிர்கொள்ள நேரிடும்," என்று அவர் கூறினார்.

பாடசாலை மாணவர்கள் 5 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பிடிபட்டால் அவர்களைத் தடுப்புமையங்களுக்கு அனுப்பலாம் என்றார். "இருப்பினும், இது போன்ற வழக்குகளில் உயர் நீதிமன்றம் முடிவெடுக்கும்," என்று அவர் கூறினார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பதற்காகவும், நாட்டை சரியான பாதையில் செலுத்துவதற்காகவும் இந்த திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதாக தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்ப எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்க முடியாவிட்டால் பயனில்லை எனவும், இது தொடர்பில் பெற்றோர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென இராஜாங்க அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

"ஐஸ் பயன்படுத்துவது ஆபத்தானது என்றாலும், முந்தைய சட்டங்களின்படி ஹெரோயின் மீது மட்டுமே சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இன்றைய நிலவரப்படி, நாடு கடுமையான போதைப் பொருள் பிரச்சினைகளை எதிர் கொள்கிறது" என்றார். (ம-7)

# கோட்டாபயவை நானா பதவி விலகக் கூறினேன்?

## ஜனாதிபதி ரணில் கேள்வி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நானா பதவி விலகக் கூறினேன்? இதில் எனது தவறு எங்கு உள்ளது? என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "போராட்டத்தின் விளைவினால் ஜனாதிபதியாகிய நான், போராட்டக்காரர்களை வழிபட வேண்டும் என்று நேற்று முன்தினம் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

இந் நாட்டின்அரசியல்யாப்புக்கு இணங்க, ஜனாதிபதி பதவி விலகினால், அந்தப் பதவியை பிரதமர்தான் பொறுப்பேற்க வேண்டும்.

நான் ஜனாதிபதியானபோது, அப்பதவிலியிருந்து விலகுமாறு எனது வீட்டை தீக்கிரையாக்கினார்கள்.

ஆனால், நான் விலகவில்லை. நான் ஜனாதிபதிபதவியை எனக்குத் தருமாறு கேட்கவும் இல்லை. கடிதங்களை எழுதவும் இல்லை.

இந்த நாட்டின் நிலைமை மோசமாக இருந்த காரணத்தினால், மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்குமாறு என்னிடம் வலியுறுத்தினார்கள்.

மாறாக எதிர்க்கட்சித் தலைவர்தான், மே 12 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியதை மறந்துவிட்டார்.

அந்தக் கடிதத்தில், ஏனைய கட்சிகளுடன் இணைந்து இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க பிரதமர் பதவியை பொறுப்பேற்கத் தயார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இப்படி எழுதிவிட்டு, ஏன் என்னை இவர்கள் குறைக்கூற வேண்டும். இந்தக் கடிதம் கிடைக்கும் முன்பே நான் பிரதமராக பதவியேற்றுவிட்டேன்.

அத்தோடு, அந்தக் கடிதத்தில் புதிய பிரதமர் நியமிக்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட காலத்தில் ஜனாதிபதி பதவிவிலகவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதனால்தான் நான் பிரதமராகி இரண்டு மாதங்களின் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்தார். நானா அவரை விலகச் சொன்னேன்? இதில் எனது தவறு எங்கு உள்ளது?" என அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ம-7)


## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் அன்னை புத்தகசாலைக்கு வேலையாட்கள் (பெண்கள்) உடன் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு (13557)

077 248 7662



## வேலையாட்கள் தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள கூலியாட்கள் தேவை. (Labours) தேவை.

வயது : 18-35

(13564)

075 944 8104
076 760 0403


# சில பொருட்களுக்கான இறக்குமதி தடை நீக்கம்

## வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

சில பொருட்களின் இறக்குமதி தடையை தளர்த்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (புதன்கிழமை) முதல் நடைமுறைக்கு வரும் வகையில், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையெழுத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குளிர்சாதன பெட்டிகள், சலவை இயந்திரங்கள், குளிரூட்டி உள்ளிட்ட பொருட்களுக்கே இவ்வாறு இறக்குமதித் தடை நீக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மரண அறிவித்தல்



தோற்றம்
03 – 07 – 1953

மறைவு
24 – 11 – 2022

### அருந்ததிதேவி குமாரசுவாமி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் வீதி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட அருந்ததிதேவி குமாரசுவாமி அவர்கள் நேற்று (24.11.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - இராசம்மா தம்பதியரின் இரண்டாவது புதல்வியும் ரஞ்சிதமலர், காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் குணசிங்கம் (ஓய்வுபெற்ற முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி), வசந்தாதேவி, சாந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் Dr. தியாகராஜா (மெடி எயிட்ஸ், கல்வியங்காடு), கலோஜினி, மகேஸ்வரன் (உரிமையாளர் - காசிப்பிள்ளை பல்பொருள் வாணிபம் சங்கானை) கமலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் வதணி (சிங்கப்பூர்), றிஸ்வி (ஆசிரியர் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்) Dr. பிரசாந்தன் (தேசிய வைத்திய சாலை - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும் ஸ்ரீராம் (மின்சார சபை - பருத்தித்துறை), தர்ஷிகா ஆகியோரின் அன்பு மாமியும் சரணியா (செலான் வங்கி - சங்கானை), சைலஜா, நிறேஸ் (லண்டன்), கோபி (லண்டன்) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் இன்று (25.11.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-5327)

தகவல் :-

மகேஸ்வரன் 076 655 1274

கு. குணசிங்கம் 077 [illegible]


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 1 பரப்பு 15 குளியில் அமைந்த வடக்கு வாசல் புதிய வீடு உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு (13562)

076 702 3565



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

(13561)

தொடர்புகளுக்கு - ஜெயம்

077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.